# மீனம்பாக்கம் RTO-ல் அத்துமீறல்...

# விபத்துக்கள் பெருக வழிவகுத்தல்...

# தடுக்குமா விஜிலென்ஸ்?




மீனம்பாக்கம் RTO–ல் ஆய்வாளராக இருப்ப வர் சிவக்குமார். இவர் சேலம் ஓமலூரில் பணி யாற்றிய போது விஜிலென்ஸ் அதிகாரிகளால் நைய புடைக்கப்பட்டு, பணியை இழந்து பல காலம் அவஸ்தையில் தனது வாழ்க்கையை தொடர்ந்தார்.

“பட்டுத்தான் வரும் என்றால்”

“கெட்டுத்தான் சேரும் என்றால்”

புத்திக்கு மதிப்பேது என்ற கதையாக, இவர் ‘பட்டும்’ திருந்தாமல், லஞ்ச லாவண்ய அடாவடி களை, மீனம்பாக்கம் பகுதியிலே பெருக்கி கொண்டே செல்கிறாராம்.

RTO–ல் எந்த அதிகாரியும் கேட்காத, பெறாத செலான்கள் (லஞ்சம்) எல்லாம், ஆய்வாளர் சிவக் குமார் கேட்கப்பட்டு, அவரது கைக்கு சென்றால் மட்டுந்தான், இவரது பார்வைக்கு வருகிற அந்த மோட்டார் வாகன ஆவணங்களில் கையெழுத்து போட்டு வருகிறாராம்.

தகுதிச் சான்றிதழ் பெறுவதற்கான (FC) வாகனங்கள், அலுவலகத்திற்கு வராமலே, FC – பாஸ் செய்யப்படுவதும், மற்றும் தகுதியற்ற வாகனங் களுக்கும், புதிய பெயிண்டிங் அடிக்காத வாகனங் களுக்கு கூட முறைகேடான பணிகளை செய்து லஞ்ச மழையில் தூள் கிளப்பி வருகிறார்.

இத்தனைக்கும் DVAC இயக்குனர் அலுவலகம் மிக அருகில் உள்ளது இருந்தாலும் எப்போதோ ஒரு முறை ரெய்டு என்பதால் வாகன அதிகாரிகள் யாரும் எதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. தகுதிச் சான்றுகளில் வழங்கும் முறைகேடுகளை அறிந்த போக்குவரத்து ஆணையரகம் TAB – என்ற ஒன்றை மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கு வழங்கி, அலுவலக வளாகத்தில் அந்த வாகனத்தை புகைப்படம் எடுத்த பின்பே FCக்கு அனுமதி என்ற நிலையை உருவாக்கி முறைகேடுகளை தடுத்து, விபத்தை தடுக்க பல நிபந்தனைகளை உரு வாக்கியது போக்குவரத்து துறை.

அதை எல்லாம் தூக்கி போட்ட மீனம்பாக்கம் ஆய்வாளர் சிவக்குமாரால் அவரது பகுதிக்குள் வருகிற வாகனங்கள் அலுவலகத்திற்கு வராமலே FC கொடுக்கப்படுகிறதாம். இதற்காக புதிய பெயிண்டிங் செய்யப்பட்ட அந்தந்த ‘பிராண்டு’ வாகனங்கள், சில புரோக்கர்களிடம் தயாராக நிறுத்தி வைக்கப்பட்டு, FC எடுக்க வேண்டிய வாகனத்தின் பேப்பர் கைக்கு வந்ததும், அந்த வாகனத்தின் பதிவு எண் பிளேட்களை மாற்றி பொருத்தி TAB–ல் படம் பிடிக்கப்பட்டு ஆய்வாளர் சிவக்குமாரால், பத்தாயிரம், இருபதாயிரம் என லஞ்சங்கள் பேரம் பேசப்பட்டு தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறதாம்.

இதில் வேடிக்கை என்னவென்றால் TAB–ல் படம் இருந்தால் தான், கணினி மூலமாக FC சான்றிதழ் பிரிண்ட் அவுட் எடுக்க முடிந்தாலும், ஏற்கனவே எடுக்கப்பட்ட அந்த புகைப்படத்தை, மீண்டும் பார்க்க முடியாது என்பதாலும், TAB–ன் Storage குறிப்பிட்ட குறைவானதாய் இருப்பதால், அந்த வாகனத்தின் புகைப்படத்தை, எந்தவொரு ஆய்வுக்கும், விஜிலென்ஸ் அதிகாரிகளும், போக்கு வரத்து துறை அதிகாரிகளும் உட்படுத்த முடியாது என்பதால் பல விதி மீறல்களோடு அனைத்து வாகனங்களுக்கும் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கி லஞ்சமழையில் மஞ்ச குளித்து வருகிறார் ஆய்வாளர் சிவக்குமார்,

இப்படி முறைகேடுகளை தடுக்க கொடுக்கப் பட்ட TAB –யை கூட முறைகேடுக்கு உபயோகப் படுத்தி லஞ்சத்தை அள்ளி வரும் ‘ஆய்’வாளருக்கு TAB எதற்கு ?

இவருக்கு மட்டுமல்ல, தமிழக முழுவதும், ஆய் வாளருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் இந்த TABகளில் பதியப்பட்ட காட்சி படங்கள் அடுத்து ஏதோ ஒரு ஆய்வுக்காக எடுத்து பார்க்கின்றபோது, அந்த படங்கள் மீண்டும் பார்க்க இயலாத போதும், முறை கேடுகளை அறிய முடியாத நிலையில் அந்த TAB – எதற்கு என்பதால், முறைகேடான பணிக்கு ஆதார மாக இருக்க கூடிய வகையில் நவீன எலக்ட்ரானிக் சாதனங்களை வழங்கிமுறைகேடுகளை தடுப்ப தோடு, விபத்துக்களையும் தடுக்க ஆணையர் நடராஜன் அவர்கள் அதிரடி காண வேண்டும் என பணிந்து கோருகின்றோம்.

**நெல்லை கோபால்**
மூத்த பத்திரிகையாளர்
9994478389.

08–03–2022